[2005 மார்ச் 4

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 66, டாக்டர் பி. வள்ளல் பெருமான், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

66—

மூத்த குடிமக்களுக்கு சலுகை

***16674—டாக்டர் பி. வள்ளல் பெருமான்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மூத்த குடிமக்களுக்கு மருத்துவ வசதிகள், பேருந்துகளில் இருக்கை முன்பதிவு உட்பட பல்வேறு சலுகைகளை அளிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் மூத்த குடிமக்களுக்கு மருத்துவ வசதிகள் அளிப்பதற்கென சென்னை அரசு பொது மருத்துவமனை மற்றும் மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் வசதிகள் உள்ளன. அரசு பேருந்துகளில் முதியோர்களுக்கான இருக்கை ஒதுக்கப்பட்டுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன் அவர்கள். வள்ளல் பெருமானுக்குப் பதிலாகக் கேளுங்கள்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மூத்த குடிமக்களுக்கு மருத்துவ வசதிகள், மருத்துவமனைகளிலே ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால், மூத்த குடிமக்களில் பலர் இன்று ஆதரவற்ற நிலையிலே பஸ் ஸ்டாண்டுகள், ஆஸ்பத்திரிகள் போன்ற இடங்களிலே அலைந்து திரிகிறார்கள். அப்படிப்பட்டவர்களைத் தங்க வைத்து, அவர்களுக்கு உணவு வழங்குவதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா? இல்லையென்றால், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்குமா?

2005 மார்ச் 4]

முற்பகல் 10-25

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது போன்ற ஆதரவற்ற முதியவர்களுக்கு பல்வேறு வசதிகளை நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செய்து வருகின்றது. இன்றைக்கு ஆதரவற்ற, வருமானம் இன்றி உள்ள முதியவர்களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும் வகையில், முதியோர் உதவித் திட்டத்தின்கீழ் மாதம் ஒன்றிற்கு 200 ரூபாய் வீதம் வழங்கப்பட்டு வருகிறது. ஆண்டிற்கு இருமுறை பொங்கல், தீபாவளி பண்டிகைகளை முன்னிட்டு இலவச வேட்டி—சேலை வழங்கப்பட்டு வருகிறது. சத்துணவுக் கூடங்களில் மதிய உணவு உட்கொள்பவர்களுக்கு மாதம் இரண்டு கிலோ அரிசியும், மதிய உணவு உட்கொள்ளாதவர்களுக்கு நான்கு கிலோ அரிசியும் இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. முதியோர் இல்லங்கள், நடமாடும் மருத்துவக் குழு மற்றும் பகல் நேரக் காப்பகங்கள் நடத்தும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களை ஊக்குவிக்கும் வகையில் அவற்றிற்கு மத்திய அரசு மற்றும் மாநில அரசால் மானியம் வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் முதியவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு உடல்நலம், இருப்பிட வசதிகள், ஆலோசனை மையங்கள், கல்வி முன்னேற்றம், பாதுகாப்பு அளிப்பது குறித்து முதியவர்களுக்கான மாநில கொள்கை விரைவில் அரசால் வெளியிடப்படவுள்ளது என்பதனையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. கு. பிச்சாண்டி.

திரு. கு. பிச்சாண்டி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கின்ற மூத்த குடிமக்களுடைய எண்ணிக்கை, துறையில் இருக்கிறதா? குறிப்பாக கலசப்பாக்கம் தொகுதியில், மல்லவாடியில் இருக்கின்ற தொழுநோயாளிகள் இல்லத்தில் முதியோர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். ஆனால், அந்த இல்லம் மூடப்பட்டு அருகிலே இருக்கின்ற தொழுநோயாளிகள் இல்லங்களிலே அவர்கள் சேர்க்கப்படுவார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்தத் தொழுநோயாளிகள் இல்லம் அங்கேயே இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் ஆதரவற்றோர், முதியோர் உதவித் தொகை பெறுவோர், 4,70,949 பேரும், உடல் ஊனமுற்றோர் உதவித் தொகை 58,104 பேரும், விதவை உதவித்

தொகை 4,82,856 பேரும், விவசாயக் கூலி உதவித் தொகை 92,051 பேருக்கும், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் உதவித் தொகை 81,218 பேருக்கும் மொத்தம் 11,85,178 பேர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. இதில் சமீபத்தில் 650 பேர் இறந்திருக்கிறார்கள். அந்த 650 பேர்கள் போக மீதி 11,84,528 பேர்களுக்கு தமிழக அரசு உதவித் தொகை வழங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 67, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

67—

பணவிடை மூலம் உதவித் தொகை

***35226—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏழை விதவைகள், முதியோர், கணவனால் கைவிடப்பட்டவர்கள் ஆகியோருக்கு பணவிடைமூலம் அனுப்பப்படும் பணம் சம்பந்தப்பட்டவர்களுக்கு போய்ச் சேருவதில்லை என்ற புகார் பற்றி அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தாங்களே கையெழுத்து/கைரேகையிட்டு பணத்தை எடுத்துக்கொள்ளும் ஒருசில அஞ்சல் ஊழியர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி ப. விஜயலட்சுமி பழனிச்சாமி, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) சென்னை, சேலம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களைத் தவிர பிற மாவட்டங்களில் தபால் துறை ஊழியர்களால் முதியோர் ஓய்வூதியம் வழங்கப்படுவதில் முறைகேடு எதுவும் செய்வதாகப் புகார் தெரிவிக்கப்படவில்லை.

(ஆ) சென்னை மாவட்டத்தில் பெரம்பூர்-புரசைவாக்கம், கோட்டை-தண்டையார்பேட்டை வட்டங்களிலும், சேலம் மாவட்டத்தில் வாழப்பாடி வட்டத்திலும், திருவண்ணாமலை மாவட்டத்தில் போளூர் வட்டத்திலும் முதியோர் ஓய்வூதியத்தில் தபால் துறை ஊழியர்களால் முறைகேடுகள் செய்யப்பட்டுள்ளதாகக் கண்டறியப்பட்டு, சம்பந்தப்பட்டவர்கள்மீது கடும் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.